No. of Printed Pages : 7

**7475**

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

# பகுதி - III — சிறப்புத் தமிழ்
# Part - III — ADVANCED LANGUAGE — TAMIL

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** பாவைக்கூத்து என்று அழைக்கப்படும் கிராமியக் கலை :
(அ) சிலம்பாட்டம் (ஆ) பொம்மலாட்டம்
(இ) காவடியாட்டம் (ஈ) கரகாட்டம்

**2.** ரேடியோ என்ற சொல்லுக்கு வானொலி என்ற தமிழ்க் கலைச்சொல்லை உருவாக்கி அளித்தவர் :
(அ) டி.கே. சிதம்பரனார் (ஆ) வெ. நல்லதம்பி
(இ) டி.கே. பட்டம்மாள் (ஈ) தென்கச்சி கோ. சுவாமிநாதன்

**3.** ‘நூபுர் க ஸ்வர்’ என்ற பெயரில் இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டுப் புதுதில்லி வானொலியில் ஒலிபரப்பான காப்பிய நாடகம் :
(அ) சீவகசிந்தாமணி (ஆ) சிலப்பதிகாரம்
(இ) குண்டலகேசி (ஈ) மணிமேகலை

[ திருப்புக

4. தமிழின் செவ்வியல் தன்மைக்குச் சான்றாக விளங்குபவை :

(அ) சங்க இலக்கியங்கள் (ஆ) இடைக்கால இலக்கியங்கள்

(இ) இக்கால இலக்கியங்கள் (ஈ) பக்தி இலக்கியங்கள்

5. பன்னிரு திருமுறைகளை __________ நாயன்மார்கள் பாடியுள்ளனர்.

(அ) 72 (ஆ) 63 (இ) 27 (ஈ) 87

6. தமிழின் முதல் புதினமாக அறியப்படுவது :

(அ) பிரதாப முதலியார் சரித்திரம் (ஆ) கமலாம்பாள் சரித்திரம்

(இ) ராஜசேகர சரித்திரம் (ஈ) பத்மாவதி சரித்திரம்

7. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (1) | இலட்சியவாதப் புதினம் | (i) | பஞ்சும் பசியும் |
| (2) | வரலாற்றுப் புதினம் | (ii) | அறுவடை |
| (3) | முற்போக்குப் புதினம் | (iii) | அகல் விளக்கு |
| (4) | வட்டார வழக்குப் புதினம் | (iv) | பொன்னியின் செல்வன் |

(அ) (1)-(i), (2)-(iv), (3)-(iii), (4)-(ii)

(ஆ) (1)-(iii), (2)-(iv), (3)-(i), (4)-(ii)

(இ) (1)-(ii), (2)-(iii), (3)-(iv), (4)-(i)

(ஈ) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)

8. ''கோடிக்கால் பூதமடா தொழிலாளி கோபத்தின் ரூபமடா.
இது சாவில்லாத வார்த்தை'' - இது யார் கூற்று ?

(அ) காவேரி (ஆ) சங்கரன் (இ) சுசீலா (ஈ) ராகினி

9. பாரதியாரின் குயில்பாட்டை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் :

(அ) ரவீந்திரநாத் தாகூர் (ஆ) தகழி சிவசங்கரன்

(இ) ஜி. திலகவதி (ஈ) ஹெப்சிபா ஜேசுதாசன்

**10.** பின்வரும் **கூற்றையும் காரணத்தையும்** படித்துப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

**கூற்று** : ஆங்கில மொழி உட்பிணைப்பு நிலையைச் சார்ந்தது.

**காரணம்** : ஆங்கில மொழியில் அடிச்சொற்கள் இரண்டு சேரும்போது, ஒன்று சிதைந்தும் மற்றொன்று சிதையாமலும் நிற்கும்.

(அ) **கூற்று** தவறு, **காரணம்** சரி

(ஆ) **கூற்று** சரி, **காரணம்** தவறு

(இ) **கூற்று, காரணம்** இரண்டும் சரி

(ஈ) **கூற்று, காரணம்** இரண்டும் தவறு

**11.** 'வடமொழி, எபிரேயம், கிரேக்கம் ஆகிய மூன்று இலக்கிய மொழிகளில் தமிழ்ச்சொற்கள் கலந்திருக்கின்றன' என்று கூறியவர் :

(அ) மாக்ஸ்முல்லர் (ஆ) பெர்சிவல்

(இ) ஈராஸ் பாதிரியார் (ஈ) ரைஸ்டேவிஸ்

**12.** 'தி ஜாஸ் சிங்கர்' என்பது :

(அ) இந்தியாவின் முதல் மௌனப்படம்

(ஆ) உலகின் முதல் மௌனப்படம்

(இ) இந்தியாவின் முதல் பேசும்படம்

(ஈ) உலகின் முதல் பேசும்படம்

**13.** பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்கவும் :

(அ) பரீக்ஷா - ஞாநி

(ஆ) கூத்துப்பட்டறை - ந. முத்துசாமி

(இ) சென்னை கலைக்குழு - பிரளயன்

(ஈ) நிஜ நாடக இயக்கம் - இந்திரா பார்த்தசாரதி

**14.** தூண்டல் செய்கைக்குத் துலங்கலாக மொழி வெளிப்படுகிறது என்று கூறிய மொழியியல் அறிஞர் __________.

(அ) மாலினோவ்ஸ்கி (ஆ) சசூர்

(இ) பிர்த் (ஈ) ஃப்ளூம்பீல்டு

[ திருப்புக

**15.** சொற்கள் பொருளுணர்த்தும் தன்மை குறித்து ஆராய்வது ________.

(அ) பொருண்மையியல் (ஆ) தொடரியல்

(இ) ஒலியனியல் (ஈ) உருபனியல்

**16.** ஐபோன் சந்தைக்கு வரும்வரை ________ நிறுவனமே திறன்பேசி விற்பனையில் முதன்மையானதாக விளங்கியது.

(அ) சோனி எரிக்சன் (ஆ) மைக்ரோசாப்ட்

(இ) நோக்கியா (ஈ) பிளாக்பெர்ரி

**17.** **கூற்று** : கந்தர்வன் தீராவை இந்தியா முழுவதும் அனுப்பினார்.

**காரணம்** : தீரா இந்தியாவின் அனைத்துப் பகுதிகளுக்கும் இயற்கை மொழிகளை ஆய்வு செய்யச் சென்றது.

(அ) **கூற்று** தவறு, **காரணம்** சரி

(ஆ) **கூற்றும் காரணமும்** சரி

(இ) **கூற்றும் காரணமும்** தவறு

(ஈ) **கூற்று** சரி, **காரணம்** தவறு

**18.** சிற்றிலக்கிய வகைகளில் எளிமையும் இனிமையும் வாய்ந்த ஓர் இலக்கியம் :

(அ) சதகம் (ஆ) பிள்ளைத்தமிழ்

(இ) பள்ளு (ஈ) கோவை

**19.** மார்க்சியக் கோட்பாட்டை உருவாக்கியவர் ________.

(அ) கார்ல் மார்க்ஸ் (ஆ) ஜான்சன்

(இ) பிரான்சிஸ் பேக்கன் (ஈ) ஜான் டிரைடன்

**20.** நெடுநல்வாடையில், பாண்டிய மன்னர்களுக்குரிய அடையாள மாலையாகக் குறிப்பிடுவதைத் தேர்ந்தெடுக்கவும்.

(அ) தாழம்பூ (ஆ) பனம்பூ (இ) மாம்பூ (ஈ) வேப்பம்பூ

## பகுதி - II

**குறிப்பு :** பின்வருவனவற்றுள் **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண் **30 -க்கு கட்டாயமாக** விடையளிக்க வேண்டும். **7x2=14**

**21.** இன்று இயலிகள் பயன்படுத்தப்படும் துறைகளைப் பட்டியலிடுக.

**22.** உலகத்தின் முதல் வானொலி எங்கு, எப்பொழுது தொடங்கப்பட்டது ?

**23.** ஆங்கிலம் என்பதன் மூலச்சொல் எது ? இஃது எங்கு யாரால் பேசப்பட்டது ?

**24.** சூழல் கோட்பாடு எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

**25.** சத்யஜித்ரேயின் முதல் மூன்று படங்கள் யாவை ?

**26.** அரிஸ்டாட்டில் வரையறை செய்யும் மூவோர்மைகள் எவை ?

**27.** 'நாசுதிராதிக் ஆய்வு' - குறிப்பு வரைக.

**28.** சாகித்ய அகாதெமி விருது பெற்ற புதினங்களுள் எவையேனும் நான்கனைக் குறிப்பிடுக.

**29.** சிற்றிலக்கியங்களின் வகைகளுள் எவையேனும் நான்கினை எழுதுக.

**30.** ஞானபீட விருது - விளக்குக.

## பகுதி - III

**குறிப்பு :** பின்வருவனவற்றுள் **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண் **40 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

**31.** எழுவாய், பயனிலை இயைபு - தமிழிலும் ஆங்கிலத்திலும் எவ்வாறு அமைந்துள்ளன ? ஒப்பிடுக.

**32.** 'விளக்கைக் குளிரவை' எனக் கூறுவது எதன்பாற்படும் ? ஏன் ?

[ திருப்புக

**33.** தொல்காப்பியர் குறிப்பிடும் உரிப்பொருள்கள் ஏழனைக் குறிப்பிடுக.

**34.** புதினம் எழுதுதலில் பின்னோக்கு முன்னோக்கு உத்திகள் குறித்து எழுதுக.

**35.** தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் இலக்கிய நிகழ்ச்சிகளுள் எவையேனும் ஐந்தனைக் கூறி விளக்குக.

**36.** திறனாய்வாளர் பெற்றிருக்க வேண்டிய தகுதிகள் யாவை ?

**37.** பெண்ணிய அரங்கச் செயல்பாடுகள் குறித்து எழுதுக.

**38.** காவேரி ஆற்றுடன் தலையாரியின் அனுபவத்தை விவரிக்கவும்.

**39.** ஒழுக்கமுடையோரும் இல்லாதாரும் எய்தும் நிலையாக விவேகசிந்தாமணி கூறுவன யாவை ?

**40.** 5 ஜி தொழில் நுட்பம் குறித்து விளக்குக.

## பகுதி - IV

**குறிப்பு :** பின்வரும் **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

**41.** (அ) வானொலி உரைச்சித்திரம் குறித்து விரிவாக எழுதுக.

**அல்லது**

(ஆ) தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் குறித்து விரிவாக எழுதுக.

**42.** (அ) புறப்புண் நாணி வடக்கிருந்தோனே - இடம்சுட்டி விளக்குக.

**அல்லது**

(ஆ) புதினம் எழுதும் உத்திகளை வகைப்படுத்துக.

**43.** (அ) முதலாளிக்கு ஆதரவாக இருந்த ராகினி, தொழிலாளர்களுக்கு ஆதரவாக மாறிய விதத்தினை விளக்குக.

**அல்லது**

(ஆ) சாயாவனம் புதினத்தில் சிதம்பரம் கரும்பு ஆலை நிறுவ, வனத்தை அழித்து மேற்கொண்ட முயற்சிகளை உன் பார்வையில் மதிப்பிடுக.

**44.** (அ) நபிகள் நாயகத்தின் பெருமையை உமறுப்புலவர் எவ்வாறு விளக்குகிறார் ?

**அல்லது**

(ஆ) ஒரு திரைப்படம் கலைத்தன்மை வாய்ந்தது என எவ்வாறு கருதப்படுகிறது ?

**45.** (அ) திராவிட மொழிகளும் ஆங்கிலமும் தொடரமைப்பில் மாறுபடுவதை எவையேனும் ஐந்து எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

**அல்லது**

(ஆ) சூழல் கோட்பாட்டின் அடிப்படையில் சொற்கள் எவ்வாறு பொருண்மையை உணர்த்துகின்றன ?

**46.** (அ) ஏதேனும் மூன்று மொழிப்பயன்பாட்டுக் கருவிகள் குறித்து விளக்குக.

**அல்லது**

(ஆ) இ-பப் அமைப்பில் மின்னூல் வடிவமைப்பதை விவரிக்கவும்.

**47.** (அ) திறனாய்வினால் விளையும் பயன்கள் யாவை ?

**அல்லது**

(ஆ) 'சாரல்' என்னும் சொல் எவ்வாறெல்லாம் திரிந்து வழங்கியது என்பதை விளக்குக.

**- o 0 o -**